1972 ஆகஸ்ட் 24]

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, வயது வரம்பைக் குறைக்க வேண்டுமென்று பல மாநிலங்களிலிருந்து மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். நமது மாநில அரசாங்கமும் அந்தக் கருத்தை வற்புறுத்திச் சொல்லுகின்ற அதே நேரத்தில் தேர்தலில் கள்ள வோட்டு போடுவதையும் தடுப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்த கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. வயது வரம்பைக் குறைப்பது பற்றி ஏற்கனவே தெளிவாகப் பதிலளித்து விட்டேன்.

அரசுப் பணிகளில் சேர வயது வரம்பு

***297 வினா—திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சர்வீஸ் கமிஷன் தேர்வுகளுக்கான வயது வரம்பினை உயர்த்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசுப் பணியில் சேருவதற்கான உயர்ந்த அளவு வயது வரம்பை 25-லிருந்து 30 ஆக உயர்த்த வேண்டும் என்ற தமிழ்நாடு அரசிதழ் பதிவு பெறா அரசு அலுவலர்களின் சங்கத்தின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that many persons who have registered their names in the Employment Exchange are given only temporary jobs for two or three months and again they have to go back to the Employment Exchange for renewal of their names. By the time they get permanent jobs, they would be more than 25 years. So, will the Government show some concession to the persons who have got temporary jobs by relaxing the age restriction so that they can get permanent jobs?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் அதன் உட்பொருளை உணர்ந்துகொண்டு விளக்கம் அளித்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் பரிசீலனை செய்துபார்த்து, 'மத்திய சர்வீஸ் கமிஷனில்—அவர்கள் 24 வயது என்றிருந்ததை 26 என்று உயர்த்தி

இருக்கிறார்கள்; நீங்கள் 25-ல் இருந்து 30 ஆக உயர்த்தலாமே' என்று தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குத் தெரிவிக்கப் பட்டது. அவர்கள் அது சாத்தியமில்லை என்று தெரிவித்திருக் கிறார்கள். மீண்டும் மத்திய பப்ளிக் சர்விஸ் கமிஷனில் இருப்பது போல் 26 வயதாக உயர்த்தலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அதுபற்றி பரிசீலனை செய்து வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே. கேரளா பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் பின்தங்கிய வகுப்பினருக்கு 28 வயது என்று வைத்திருக்கிறார்கள். அதேமாதிரி தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலும் உடனடியாகப் பின்தங்கிய வகுப்பினருக்கு வயது வரம்பை 28 என்று நிர்ணயிக்க தமிழ்நாடு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பின்தங்கிய வகுப் பினர்களுக்கு—சாதாரணமாக எல்லோருக்கும் வயது வரம்பு 25 என்றிருந்தாலும்—கூடுதல் கல்வித் தகுதி இருந்தால் வயது வரம்பே கிடையாது என்ற நிலை இருக்கிறது. கேரள அரசைப் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி பரிசீலனை செய்யவேண்டும். அதிலும் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு 30 வயது வரை தளர்த்திக் கொடுக்கலாம் என்றிருக்கிறது. கூடுதல் கல்வித் தகுதி பெற்றிருப்பார்கள். ஆனால் வயது வரம்பே இல்லாத நிலை இருக்கிறது. மேலும் பின்தங்கிய வகுப்பினர் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதுவதற்கு இரண்டு முறை பீஸ் கட்ட வேண்டியதில்லை என்றிருந்தது. இப்போது அதை மூன்று தடவை ஆக்கியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எப்போதுமே பீஸ் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அறிவர்.

திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருவர் 10 (ஏ) (i விதிப்படி ஒருமுறை வேலை வாய்ப்பு பெற்று விட்டாலே, சர்வீஸ் கமிஷன் தேர்வு அப்பியர் ஆவதற்கு வயது இன்னதுதான் என்று குறிப்பிடாமல் இருக்கச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தக் கேள்விதான் ஏற்கனவே கேட்கப்பட்டது. அதற்கு நான் பதில் அளித்து விட்டேன்.

திரு ஏ. சுப்பிரமணியம்: துணைத் தலைவர் அவர்களே, அரசு முடிவு செய்யும்பொழுது, ஏற்கெனவே 25 வயது ஆகிவிட்டது என்ற காரணத்தினாலே உரிமை மறுக்கப்பட்டவர்களுக்கு அந்த உரிமையைக் கொடுக்க வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முடிவு எடுக்கிற நேரத்தில் அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, வயதைக் கூட்டுவதற்கு அரசாங்கம் யோசித்துக் கொண்டிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனாலே, ரிடைரிங் ஏஜ் ஏதாவது மாற்றியமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை.

Sale of liquor and toddy.

* 298 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to bring under the co-operative fold, the sale of liquor and toddy instead of the present system of auctioning of the shops; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: துணைத் தலைவர் அவர்களே, கடைகளை தனிப்பட்டவர்களுக்கு ஏலம் விடுவதன்மூலம் அதிகப்படியான லாபம் அவர்களுக்குக் கிடைக்கிறதே, அதை மாற்றி கூட்டுறவு முறையிலே அதை நடத்தினால் இன்னும் அதிகமான லாபம் சர்க்காருக்கு வருமே, அதை அரசு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது இயலாத ஒன்று என்று எண்ணி அந்த முறையை மேற்கொள்ளவில்லை.